[9th March 1964

(இ) 1961-62 ஆண்டுகளில் எத்தனை பேர்கள் கண் தானம் செய்தார்கள் ?

(உ) இவ்வாறு இறந்தவர்களின் கண்களைச் சேகரிக்க அவர்களின் வாரிசுகளுக்கு நன்கொடை ஏதேனும் அளிக்கப்படுகிறதா ? எவ்வளவு ?

(எ) 1961-62 ஆண்டுகளில் எவ்வளவு தொகை அளிக்கப் பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) மூன்று.

(இ) மூன்று.

(உ) இல்லை.

(எ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

மணிமேகலா அனாதை இல்லம்

* 188 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-63-ல் சிதம்பரம் தாலுகா சேத்தியாத்தோப்பு மணிமேகலா அனாதை இல்லத்திற்கு எவ்வளவு போர்டிங் கிராண்ட் வழங்கப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No grant has been paid during 1962–63 to this Orphanage. The matter is under consideration.

Industrial Training Institute, Gingee taluk

* 189 *Q.*—SRI G. RAJARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start an Industrial Training Institute in Gingee taluk during the Third Five-Year Plan?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

தொழிற்பேட்டைகள்

* 190 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா,**

திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் இம்மாநிலத்தில் சர்க்கார் எத்தனை தொழிற்பேட்டைகள் அமைக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

(இ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் ?

9th March 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துள்ள பதின்மூன்று தொழிற்பேட்டைகளை நிறுவும் திட்டங்களுக்கு அரசாங்கம் இதுவரை அனுமதியளித்திருக்கிறது. இவற்றில் 1961-ல் அனுமதியளிக்கப்பட்ட பத்து தொழில் பேட்டைகள் 1964-ல் செயல்படத் தொடங்கும்.

(இ) தஞ்சாவூரில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்கெனவே நிறுவப்பட்ட ஒரு தொழில்பேட்டையோடு, கும்பகோணத்தில் மற்றொரு தொழில்பேட்டை நிறுவ 1963 மார்ச்சில் அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் தொழில்பேட்டை 1965 ஜூன் மாதவாக்கில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, what are the places where industrial estates would be established in 1964?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, அரக்கோணம், கோவில்பட்டி, காரைக்குடி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, விருத்தாசலம், அம்பத்தூர், மாதவரம் இதிலெல்லாம் இந்த வருஷத்திலேயே வேலை தொடங்கப்படும். கும்பகோணம், நாகர்கோவில், இந்த இரண்டு இடங்களில் இன்னும் இரண்டு ஆண்டுகளிலே தொடங்கும்.

வாணியம்பாடி தாலுகா நிறுவுதல்

*191 **கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வாணியம்பாடி துணை தாலுகாவுடன் ஆம்பூர், திருப்பத்தூர் பிர்க்காக்களை சேர்த்து வாணியம்பாடி தாலுகா என்று ஒரு தனித் தாலுகாவை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in view of certain administrative difficulties and inconvenience being experienced in the present set-up of the taluk is there any proposal under the consideration of the Government to reorganise the taluks on administrative grounds?

THE HON. SRI V. RAMAIAH : There is no general study as such. But, due to administrative reasons, if there are any difficulties experienced and if proper recommendations come up from the Collector and the Board considers them, the Government in order to give better facilities, may also take decisions and accept proposals.